செய்தி வெளியீடு எண்: 127 நாள் : **24.02.2014**

## செய்தி வெளியீடு

வருவாய்த் துறையின் சார்பில், மாநிலம் முழுவதும் உள்ள துணை ஆட்சியர் நிலை அலுவலர்களுக்கான பேரிடர் மேலாண்மை குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சியின் தொடக்க விழா இன்று 24.02.2014 சென்னை, ராஜா அண்ணாமலைபுரம் அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.பி.வி.இரமணா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, இரண்டு நாள் நடைபெறும் பேரிடர் மேலாண்மை குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சியினை தொடங்கி வைத்து, சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப, அவர்கள் தலைமையுரை ஆற்றினார். முதன்மைச் செயலர் / இயக்குநர் அண்ணா மேலாண்மை நிலையம் திரு.வெ. இறையன்பு, இ.ஆ.ப, அவர்கள் வரவேற்ப்புரையும், கூடுதல் ஆணையர் (பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிப்பு) திரு.ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப, நன்றியுரையாற்றினார். திரு. இரா. மணிமாறன் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் கலந்து கொண்டார்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், “ இந்த இரண்டு நாள் பயிற்சியினை தொடங்கி வைக்கும் நாள் மிகவும் சிறப்பு வாய்ந்த நாளாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த இந்நன்நாளில் இந்த பயிற்சியினை தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்சியும் பெருமிதமும் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களது சீரிய வழிகாட்டுதலின் பெயரில் தமிழக வருவாய்த்துறை பல முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வருவாய்த்துறை வரலாற்றின் முதன் முறையாக மாநில அளவில், வருவாய்த் துறையில் களப்பணியில் ஈடுபடும் அலுவலர்களுக்கு பேரிடர் மேலாண்மை குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையும், சென்னை அண்ணா மேலாண்மை நிலையத்துடன் இணைந்து பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்துள்ளது என்பதை மகிழ்சியுடன் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஏனைய வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர் நிலையிலான அலுவலர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலும், இதர வருவாய்த் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு ஈரோடு மாவட்டம் பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி நிலையத்தின் மூலமாக பயிற்சிகள் அளித்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சிகளில் கலந்துகொள்ளும் அலுவலர்கள் பயிற்சியின் நோக்கத்தினை நன்கு புரிந்து கொண்டு சிறப்பாக பயிற்சி மேற்கொள்வதுடன், இப்பயிற்சியின் மூலம் பெறும் திறன்களை பயன்படுத்தி, பேரிடர்க் காலங்களில் தமிழக மக்களுக்கு சிறப்பாக செயலாற்றிட வேண்டும்.

மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005–க்கு நடைமுறைக்கு வருவதற்கு முன்னரே தமிழ்நாட்டில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் 2004–ம் ஆண்டே தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை கொள்கை வகுக்கப்பட்டது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரை தலைவராகக் கொண்டு 8 உறுப்பினர்களுடன் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் அரசாணை எண் 149, வருவாய்த்துறை, நாள் 27.05.13யின் படி ஏற்படுத்தப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

தமிழகஅரசு பேரிடர் தொடர்பான சவால்களை முன்னரே அறிந்து, அதனை தணிக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள முழுமையான பேரிடர் மேலாண்மைக் கொள்கையை வகுத்துள்ளது.

பேரிடர் மேலாண்மை என்பது அரசும் மற்றும் அனைத்து தரப்பினரும் உள்ளூர் சமுதாயத்தினரும் பங்கேற்று மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை ஆகும். தற்போது நடைமுறையில் உள்ள பேரிடருக்கு பின்னரான நிவாரண நடவடிக்கை என்பது மாற்றம் செய்யப்பட்டு, பேரிடர்களை முன்கூட்டியே அறிந்து அதற்குத் உரிய திட்டங்களை தீட்டி, அதனை உள்ளூர் சமுதாயத்தினரின் பங்களிப்புடன் எதிர்கொள்வதாக பரிணமித்துள்ளது.

அதன்படிப்படையில், தமிழக அரசின் சார்பில் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள திட்டத்தில், பேரிடர்களை தக்க முன்னெச்சரிக்கை கருவிகளின் உதவியோடு முன்னரே அறிந்து, பேரிடர் ஏற்படும் போது அதனை திறம்பட எதிர்கொள்வதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை உடனடியாக மேற்கொள்வதோடு அவர்களை பேரிடர்களிலிருந்து மீட்டு, பேரிடரின் தாக்கத்தை தணிப்பதும், இயன்றவரை நிவாரண உதவிகளை செய்து பேரிடர்களிலிருந்து அவர்களை மீட்டு, பேரிடரின் தாக்கத்தை தணித்து மேலும் இயன்றவரை பேரிடரால் ஏற்படும் இழப்பினை குறைப்பது போன்ற அணுகுமுறைகளை தமிழக அரசு திறம்பட மேற்கொண்டுள்ளது. அண்மையில், கடலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் “ தானே “ புயலினால் ஏற்பட்ட பாதிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் போர்கால மற்றும் திறம்பட்ட மீட்பு நடவடிக்கைகளை இதற்கு சான்றாகும் என்பதை நான் பெருமையோடு இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

பேரிடர் மேலாண்மை தொடர்பாக வருவாய்த்துறை அலுவலர்களின் திறன் மேம்பாட்டிற்காக ரூ.2.5 கோடி செலவில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், பேரிடர்களை எதிர்கொள்ள செயல் திட்டங்களை (Standard Operating Procedures) தயாரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் 2010–ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மாநில பேரிடர் மேலாண்மைத் திட்ட வரைவினை இறுதியாக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

இந்த பயிற்சியினை வருவாய்துறை அலுவலகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, களப்பணியில் அர்பணிப்போடு, திறம்பட பணியாற்றி வருவாய்த்துறைக்கும், தமிழக அரசுக்கும் பெருமை சேர்க்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்” என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்கள்.

இரண்டு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இப்பயிற்சி முகாமில், இன்று (24.2.2014) வருவாய்த்துறையின் முதன்மை செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்களும் முன்னாள் வருவாய் நிர்வாக ஆணையர் மத்திய நிருவாக தீர்ப்பாயத்தின் உறுப்பினர் திரு. இரா. சந்தானம், இ.ஆ.ப., (ஒய்வு) அவர்களும், நாளை (25.2.2014) அன்று கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்களும், மக்கள் நல்வாழ்வுத் துறையின் செயலர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்களும் பேரிடர் மேலாண்மை தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளிக்கவுள்ளார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9